விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

இலங்கை புகையிரத சேவைகள்

இலங்கை புகையிரத சேவையின் நீண்டதூர பயணிகள் புகையிரதங்களின் பெட்டிகள் மற்றும் மலசலகூடங்களின் உள்ளக சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாடுகளுக்கான பெறுகை - SRS F.8171

01. கொழும்பு, இலங்கை புகையிரத சேவைகள் சார்பில் திணைக்கள கொள்வனவுக் குழு தவிசாளர் இலங்கை புகையிரத சேவையின் நீண்டதூர பயணிகள் புகையிரதங்களின் பெட்டிகள் மற்றும் மலசலகூடங்களின் உள்ளக சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாடுகளுக்கான பெறுகை - SRS F.8171 எனும் பணிக்காக உள்நாட்டு வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பெற்றுக்கொள்வார்.

02. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் (NCB) மூலம் விலைமனுச் செயற்பாடானது நடாத்தப்படும்.

03. கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலிருந்து 2026-04-10ஆம் திகதி முதல் 2026-05-07ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் பின்வரும் முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்),
புகையிரத பெறுகைகள் உப திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10. இலங்கை.
தொலைபேசி : 94 (11) 2438078 அல்லது 94 (11) 4600204
தொலைநகல் : 94 (11) 2432044
மின்னஞ்சல் : pot1@railway.gov.lk, srs.slr@gmail.com, tender2@railway.gov.lk
இணையதளம் : www.railway.gov.lk

04. பாரிய தொகையான பொது வாகனங்கள், துப்புரவேற்பாட்டு வசதிகள் மற்றும் வளிச்சீராக்கி பெட்டிகள் அல்லது பாரிய அளவிலான பொது வசதிகளின் பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்பிற்கு அவர்களின் கொள்ளளவு மற்றும் இயலுமையை நிரூபிப்பதற்கான ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

05. மீளளிக்கப்படாத கட்டணமாக 35,000.00 ரூபாவை 2026-04-10ஆம் திகதி முதல் 2026-05-07ஆம் திகதி வரை பி.ப. 3.00 மணி வரையில் செலுத்துவதன் பேரில் இலங்கையில் கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத பெறுகைகள் உப திணைக்கள பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) எனும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

06. சகல் விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 2,000,000.00 ரூபா தொகைக்கான நிபந்தனையற்ற உத்தரவாதமாக விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

07. கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள், பெறுகை உப திணைக்களத்தில் 2026-04-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.

08. விலைமனுக்கள் 2026-05-08ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
பெறுகைகள் உப திணைக்கள்,
இலங்கை புகையிரத சேவைகள்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
இலங்கை புகையிரத சேவைகள்.

Ref. No. SRS/F.8171